[11th March 1958

SRI V. K. KOTHANDARAMAN : மலை மீது பழத் தோட்டங்களும் காப்பித் தோட்டங்களும் இருக்கின்றன. அந்த மலை மீது போவதற்கு பாதைகள் அமைப்பது மூலமாக மேலும் அந்தத் தோட்டக் காடுகளை அபிவிருத்தி செய்ய முடியும் ? ஆகையால், சர்க்கார் அதற்கான ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி சில வகுப்பினர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதைப் பற்றியது. இதை வைத்துக்கொண்டு அந்தப் பகுதியிலே செய்யக்கூடிய எல்லா அபிவிருத்தி வேலைகளைப் பற்றியும் கேள்வி கேட்டால் என்னால் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது.

Trench rollers

* 275 *Q.*—SRI K. ANBAZHAGAN (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total number of trench rollers with the Highways department;

(*b*) when they have been purchased and at what prices; and

(*c*) the number of days each roller has worked?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Four.

(*b*) July 1952 at Rs. 31,000 each.

(*c*) —

Roller number ..	26–001	26–003	26–004	26–005
Number of days worked.	76	52	171½	3

SRI A. GOVINDASAMY : ஏராளமான தொகை போட்டு வாங்கிய இந்த ரோலர்கள் குறைந்த நாட்களுக்கு வேலை செய்திருக்கின்றன. இப்பொழுது அவைகள் வேலை செய்கின்றனவா அல்லது உடைந்திருக்கின்றனவா ?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு நாட்கள் அவைகள் வேலைக்குத் தேவையாக இருக்கின்றனவோ அவ்வளவு நாட்களுக்கு வேலை செய்கின்றன.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்த ரோலர்கள் வேறு திட்டங்களுக்காக கொடுத்து அதன் மூலமாக அந்த இலாகா மூலமாக ஏதாவது பிரயோஜனப்பட்டு வருகிறதா?

THE HON. SRI P. KAKKAN : இதர மாகாணங்களுக்கோ அல்லது சர்க்காரின் இதர இலாகாவின் வேலைகளுக்கோ தனிப்பட்டவர்களுக்கோ அவைகள் கொடுக்கப்படுவதில்லை. ஹைவேஸ் கண்டிராக்டர்களுக்கு மட்டும் ஹைவேஸ் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

SRI A. GOVINDASAMY : 1952-ம் ஆண்டில் வாங்கிய ரோலர்களில் ஒன்று 76 நாட்களுக்குத்தான் வேலை செய்ததாகச் சொல்கிறார்கள். சுமார் இரண்டரை மாதங்கள் வேலை செய்திருக்கின்றன. பாக்கி நாட்களுக்கு அந்த ரோலருக்கு வேலையே இல்லையா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.